ஜூன் 2020
இதழ்: 5



படித்ததில் பிடித்தது

குறள் இனிது!

கவித்துளி

என்னைப் பற்றி நான்..

தென்கச்சி கதைகள்

மூளைக்கு வேலை

MKMM ஊரடங்கில் உற்சாகம்

தொல்காப்பியர்

சொல் - புதிய தொடர்

இளங்கதிர்

மாதம் ஒருமுறை மலரும் MK தமிழ்ப்பள்ளி மாணவர் மின்னிதழ்

பொருளடக்கம்

பதிப்பாசிரியர்:
வெங்கட்

குழு:
சுந்தர்,
அபிராமி,
கௌரி,
ரமேஷ்

பள்ளி அறிவிப்பு 02
குறள் இனிது 03
அறிவோம் தமிழா 03
படித்ததில் பிடித்தது 04
கவித்துளி 07
தென்கச்சி கதைகள் 09
MKMM ஊரடங்கில் உற்சாகம் 11
காட்சிப்பேழை 13
நேர்மறை 14
சொல் 17
என்னைப் பற்றி நான் 18
பிறந்தநாள் வாழ்த்துகள் 19
தமிழர் விளையாட்டுகள் 20
மூளைக்கு வேலை 21

பறவை - மயில் (Peacock)



அறிவிப்பு

அன்பான பெற்றோர்களே,
நீங்கள் அனைவரும் நலமாக இருப்பீர்கள் என விழைகிறோம். இந்தக் கல்வியாண்டின் முடிவு மற்றும் இறுதித்தேர்வு இரண்டும் சிறப்பாய் நடந்தேறியது. பிள்ளைகளுக்கு வாழ்த்துகள்.

வழக்கமாக நாம் பள்ளி ஆண்டுவிழாவை ஜூலை மாதத்தில் கொண்டாடுவோம். இந்த ஆண்டு நம் பள்ளியின் 10வது ஆண்டு என்பதால் பிரமாண்டமாகக் கொண்டாட பல திட்டங்கள் வைத்திருந்தோம்.

கெடுவாய்ப்பாக, தற்போதைய சூழ்நிலையில் திட்டமிட்டபடி ஜூலை மாதத்தில் ஆண்டு விழா நடத்த இயலாது. எனினும் இந்த நிலைமை வரும் நாள்களில் மேம்படும் எனும் நம்பிக்கையில் இதே வருடம், அக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

உற்றநேரம் வரும்பொழுது மேலதிக தகவல்களுடன் சந்திக்கிறோம்.

அன்புடன்,
பள்ளி நிர்வாகம்.

குறள் இனிது

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

பலர் முன்னே ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துன்பம் வரும்போது உடனே சென்று போக்குவதே நட்பு.

True friendship hastens to the rescue of the afflicted as readily as the hand of one whose garment is loosened before an assembly.



ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

பிள்ளையைப் பெற்றபோது மகிழ்ந்ததை விட அவன் சான்றோன் என்று மற்றவர்கள் கேட்டபொழுது தாய் மிக மகிழுவாள்.

The mother who hears her son called "a wise man" will rejoice more than she did at his birth.

பள்ளி மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த குறள்களைத் தேர்வு செய்து ஒவ்வொரு இதழிலும் நம்மிடம் பகிர்வர்.

இந்த மாதம் நமக்குக் குறள்கள் தேர்வு செய்தது ரிஷி குமார் சுரேஷ் மற்றும் நிகில் குமரேசன்.

அறிவோம் தமிழா

கன்னியாக்குமரியில் தமிழர் நிலத்திணைகள் ஐந்தில் நான்கு காணலாம்:

1) குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்)
2) முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்)
3) மருதம் (வயலும் வயல் சார்ந்த இடமும்)
4) நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்)

இங்கு மட்டுமே சித்ரா பௌர்ணமி அன்று, முழு நிலவையும் கதிரவனையும் ஒருங்கே காணலாம்.

பறவை - இமிரிச்சிட்டு (Humming Bird)

படித்ததில் பிடித்தது

பூட்டிய கிரில்லுக்கு அப்பால், ஒரு பெரியவர், கசங்கிய சாதாரண வேட்டி சட்டை, முகத்தில் கருப்பும், வெள்ளையுமாக மண்டிய ரோமக் காடு, நீண்ட பயணத்தால் களைத்த முகம் என, கையில் நகைக்கடை விளம்பரத்துடன் இருந்த ரெக்சின் பையுடன் நின்றிருந்தார்.

அவர் கையிலிருந்த சீட்டைப் பார்த்தார். "ஆனந்த், நம்பர். 8, யோகானந்தம் நகர்?"
"ஆமாம்... இது தான். நான் தான் ஆனந்த்... நீங்க... என்ன வேணும்?"

அவர் வறண்ட உதடுகளை, நாவால் ஈரப்படுத்திக் கொண்டார். "நான், உங்கப்பாவோட நண்பன்; காரைக்கால்லேருந்து வர்றேன். உங்கப்பா லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கார்" என்றார் பெரியவர். பெரியவர் ரெக்சின் பை ஜிப்பை திறந்து, ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார். வாங்கிப் பார்த்த ஆனந்த், "அப்பாவா?" என்று வினவியபடி, கடிதத்தை படித்தான்.

அதில், "அன்புள்ள ஆனந்துக்கு, அப்பா எழுதுவது. ஆசிர்வாதம். கடிதம் கொண்டு வரும் ராமசாமி, என் நண்பன். ரொம்ப நல்லவர். ரொம்ப கஷ்ட ஜீவனம். இவரது ஒரே பிள்ளை, சமீபத்தில் விபத்தில் இறந்து விட்டான். விபத்துக்கான இழப்பீடு கிடைத்தால், ராமசாமியும், அவர் மனைவியும் வாழ, ஓரளவாவது உதவியாக இருக்கும். "விபத்து சம்பந்தமான போலீஸ் விசாரணை, விபத்து ஏற்படுத்திய டிராவல்ஸ் வேன் உரிமையாளர் தர ஒப்புக் கொண்ட இழப்பீடு, இறப்பு சான்றிதழ் போன்ற சகல விவரங்களையும் சேகரித்து, அவரிடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். சென்னையில், தலைமை அலுவலகத்தில் தருவார்களாம். சென்னை அவருக்கு புதிது. நீ கொஞ்சம் அவருக்கு உதவி செய்தால் நல்லது; செய்வாய் என்று நம்புகிறேன். மற்றபடி உடம்பை பார்த்துக் கொள். பொங்கலுக்கு கண்டிப்பாக ஊருக்கு வா. உன் அப்பா பரமேஸ்வரன்...' என்று எழுதப்பட்டிருந்தது.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார் ராமசாமி. ஒரு வினாடி யோசித்தவன், சட்டென சாவி எடுத்து வந்து, கேட்டைத் திறந்தான்.

"வாங்க சார், உட்காருங்க" என்றவன், டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். தயங்கியபடி உள்ளே வந்தார் அவர். தண்ணீரை வாங்கிப் பருகினார். "சாப்பிட்டீங்களா?"

"இல்லே. வழியிலே இரண்டு வாழைப் பழம் சாப்பிட்டேன். பஸ் லேட்டு, காலையில காரைக்கால்லே கிளம்பினா, சாயங்காலம் மெட்ராஸ் போயிடலாம்ன்னு உங்கப்பா சொன்னார். பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சு. அதான்... அகாலத்திலே வந்து."

"அதனாலே என்ன? பரவாயில்லை" பிரிட்ஜை திறந்து பார்த்தான் ஆனந்த்.

தோசைமாவு இருந்தது. நான்கு தோசை சுட்டு, மிளகாய் பொடி, எண்ணெய், தண்ணீர் கொண்டு வந்து, டேபிள் மேல் வைத்தான். "சாப்பிடுங்க. இதோ வர்றேன்," என்றவன், வாசல் பக்கம் மொபைலுடன் போனான். திரும்பி வந்த போது, சாப்பிட்டு முடித்து இருந்தார் அவர்.

மேலும் கை நிறைய பேப்பர்களுடன் காத்திருந்தார். "சொல்லுங்க... என்ன நடந்தது?" என்று, அவர் எதிரில் அமர்ந்து, பேப்பர்களை வாங்கிப் பார்த்தான். பையனின் போட்டோ இருந்தது. 22 வயதில், அழகாக, பதவிசாக இருந்தான் பையன். ஆனந்துக்கு கண்கள் கலங்கின.

முகத்தை துடைத்துக் கொண்டார் ராமசாமி. "இவனுக்கு முன்னாலே பிறந்த நாலஞ்சு பேரும், சின்ன வயசிலேயே போய் சேர்ந்துட்டாங்க.

இவன் தான் தங்கினான். மகேஷ்ன்னு பேர்; கஷ்டப்பட்டு படிக்க வெச்சேன். பொறுப்பான பிள்ளை. ஸ்காலர்ஷிப்லயே பி.இ., முடிச்சான். வேலை கிடைச்சுட்டா, நம்ம கஷ்டம் தீர்ந்துடும்னு வாய்க்கு வாய் சொல்வான். வேலையும் கிடைச்சுது. என்னையும், என் மனைவியையும், நிற்க வச்சு நமஸ்காரம் செய்துட்டு, மெட்ராஸ் கிளம்பினான். பஸ் ஸ்டாண்ட் போக, ரோடு கிராஸ் செய்யறப்போ, வேகமா வந்த டிராவல் வேன் மோதி, ஸ்பாட்லேயே" மேல் துண்டால் முகத்தை மூடி, குலுங்கினார் ராமசாமி;

அவரையே பார்த்தான் ஆனந்த். தொடர்ந்தார். "அந்த வேன் சொந்தக்காரர், நஷ்ட ஈடு தர ஒத்துக்கிட்டார். முதல்லே அதை வாங்கவே மனசு ஒத்துக்கல. பிள்ளையை பறி கொடுத்துட்டு, அந்த பணத்திலே சாப்பிடறதான்னு வெறுப்பா இருந்தது. உங்கப்பா தான் எனக்கு ஆறுதல் சொல்லி, வாங்கிக்க சொல்லி வற்புறுத்தினார். எனக்கு நிரந்தரமா ஒரு வேலையும் கிடையாது. என் மனைவி ஏற்கனவே நோயாளி, பிள்ளை போன துக்கத்திலே, படுத்த படுக்கையாயிட்டா. எங்களை பகவான் அழைச்சுக்கற வரை, சாப்பிட்டுத் தொலைக்கணுமே.?!

அதனாலே, கடைசியா நஷ்ட ஈடு வாங்கிக்க சம்மதிச்சேன்.

உங்கப்பா தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து, இங்கே அனுப்பி வெச்சார் தம்பி. அவர்தான் எனக்கு துணை. என் பிள்ளை உங்களுக்கு உதவி செய்வான்னு லெட்டர் கொடுத்தார்." "செய்யறேன். கண்டிப்பா உதவி செய்றேன்," என்று எழுந்தவன், அவர் படுக்க, பாயும் தலையணையும் கொடுத்தான்.

மறுநாள் காலை, காபி போட்டு அவருக்கு கொடுத்து, தானும் குடித்து, குளித்து விட்டு வந்தான். அவரும் குளித்து விட்டு வந்தார். இருவருமாக பைக்கில் கிளம்பினர். "இங்கே நுங்கம்பாக்கம்ன்னு இருக்காமே. அங்கேதான் ஹெட் ஆபீஸ் இருக்காம்." "நுங்கம்பாக்கம் பக்கம் தான். நான் கூட வந்து செஞ்சு தர்றேன், வழியில் ஓட்டலில் டிபனை முடித்து, டிராவல் ஆபீஸ் வந்தனர். பார்மாலிடீஸ் எல்லாம் முடித்து,"செக்' கைக்கு வர மதியம் ஆனது.

"ரொம்ப நன்றிப்பா. எனக்காக ரொம்ப சிரமப்பட்டுட்டே. நான் இப்படியே ஊருக்கு கிளம்பறேன். இப்ப பஸ் புடிச்சா, ராத்திரிக்குள்ளே காரைக்கால் போயிடலாம். என் மனைவி தனியா இருக்கா; துணைக்கு ஆள் இல்லை...".



""நானே பஸ் ஏத்தி விடறேன் வாங்க," என்றவன், ஓட்டலுக்கு அழைத்துப் போனான் ஆனந்த். அவர் மறுத்தும் கேளாமல், சாப்பிட வைத்து, தானும் சாப்பிட்டான். கோயம்பேடு வரை பைக்கில் அழைத்துச் சென்று, காரைக்கால் பஸ்சில் ஏற்றி விட்டான். டிக்கட் வாங்க என்று ஐநூறு ரூபாயை, பிடிவாதமாக அவர் சட்டைப் பையில் திணித்தான்.

"ஒரு நிமிஷம்..." என்று போனவன், ஒரு பிளாஸ்டிக் பையுடன் வந்தான். "ஊர் போய் சேர எத்தனை நேரம் ஆகுமோ, வழியிலே சாப்பிட்டுக்குங்க..." என்று, டிபன் பொட்டலம், தண்ணீர் பாட்டில் அடங்கிய பையை, அவரிடம் கொடுத்தான். அவர் நெகிழ்ந்தார்.

"என்னாலே உனக்கு சிரமம்ப்பா. லீவு வேறே போட்டுட்டு,எனக்காக அலைஞ்சிருக்கே. ஊருக்கு போனதும் உங்கப்பாவுக்கு நன்றி சொல்லணும்" ராமசாமி உணர்ச்சி வசப்பட்டு பேசிக் கொண்டே போக, அமைதியாக அவர் பக்கத்தில் அமர்ந்தான், ஆனந்த்.

"ஒரு விஷயம் சார்... நீங்க தேடி வந்த ஆனந்த் நான் இல்லே..."

ராமசாமி திடுக்கிட்டார். "என்னப்பா சொல்றே?"

"ஆமாம்... நீங்க அட்ரஸ் தப்பா வந்துட்டீங்க... நான் இருக்கிறது, யோகானந்தம் நகர். நீங்க, மெயின் யோகானந்தம் நகர் போயிருக்கணும். அது, கிட்டத்தட்ட, 2 கி.மீ., தொலைவில இருக்கு." ராமசாமிக்கு, "குப்'பென வியர்த்தது.

"அடடா... தப்பு செய்துட்டேனே... ரொம்ப ரொம்ப சாரிப்பா. நீ, நான் வந்தவுடனேயே சொல்லியிருக்கலாமே... அனாவசியமா எதுக்கு எனக்காக மெனக்கட்டு..." அவரைத் தடுத்தான் ஆனந்த்.

நீங்க வந்தது ராத்திரி பத்தரை மணிக்கு... மெட்ராஸ்ல இருக்கிறவங்களுக்கே, இங்க அட்ரஸ் தேடி கண்டு பிடிக்கறது கஷ்டம்; நீங்க மெட்ராசுக்கு புதுசு வேற. அதிலேயும், நீங்க வந்த காரியத்தை பத்தி தெரிஞ்சதுலே, எனக்கு மனசு சங்கடமா போயிட்டது...

அதான் உங்களை சாப்பிட சொல்லிட்டு, லெட்டர்லே இருந்த நம்பருக்கு கால் போட்டு பேசினேன். நீங்க அட்ரஸ் மாறி வந்த விஷயம் கேட்டு, உங்க நண்பர், அதான், அந்த ஆனந்தோட அப்பா, ரொம்பவே வருத்தப்பட்டார். அவர்கிட்டே, அவர் பிள்ளையோட நம்பர் கேட்டு வாங்கிப் பேசிட்டு... பொழுது விடிஞ்சதும், ஒரு ஆட்டோவிலே உங்களை அனுப்பி வைக்கலாம்ன்னு இருந்தேன்.

ஆனா, மொபைல் போன்ல பேசினது ஆனந்தோட மனைவி. அவர் ஆபீஸ் விஷயமா டில்லி போயிருக்காராம். வர ஒரு வாரம் ஆகுமாம். அப்பதான் முடிவு செய்தேன். நேரடியா, நானே உங்களுக்கு உதவி செய்திடலாம்ன்னு... எந்த ஆனந்துன்னா என்ன சார்...?!

நஷ்ட ஈடு உங்களுக்கு கிடைக்க, நான் உதவியா இருந்தேனேன்னு, நிம்மதி என் மனசிலே நிறைஞ்சு இருக்கு. அது போதும் சார்..."

டிரைவரும், கண்டக்டரும் பஸ்சில் ஏற, எழுந்தான் ஆனந்த்.



அவன் கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டார் ராமசாமி. அவன் உள்ளங்கை, ராமசாமியின் கண்ணீரால் நனைந்தது.

"நல்லா இருப்பா... நல்லா இரு... வேறென்ன சொல்றது?" பதினைந்து வருடங்களுக்கு முன் செத்துப் போன தன் அப்பாவை நினைத்துக் கொண்டான்.

"அப்பா, நீங்க இப்ப உயிரோடு இருந்து, இது மாதிரி லெட்டர் கொடுத்தனுப்பி இருந்தாலும், கண்டிப்பா உதவி செஞ்சிருப்பேன். என் வளர்ச்சியை பார்க்காமலே போயிட்டீங்களே! யாரோ ஒருத்தருக்கு பிள்ளையா இருந்து, அவர் நண்பருக்கு உதவி செய்திருக்கேன் அப்பா... உங்களுக்கு திருப்தி தானே?'

கனத்த மனதுடன், பஸ்சை விட்டு இறங்கினான் ஆனந்த்.

-@ChennaiViswa

பறவை - செனகல் குதிரைத் தலைக் கோட்டான் (Senegal Whimbrel)

கவிக்குளி



உளரடங்கி மூன்று மாதம்

பிரிந்திருக்கும் உறவுகள்,
அடைக்கப்பட்ட அலுவல்கள்
உறைந்துவிட்ட ஊர்திகள்.

புலப்படாத வைரஸ் இன்று
புலனடைத்து ஒடுக்கியதே.
உயிர்ச்சேதம் கூடிவர
மார்க்கெட்டுகள் சரிந்திடுதே.

வெறிச்சோடிய வீதிகளில்
முகம் மூடி மனிதர்கள்...
விரைந்தோடிய வாழ்க்கையில்
இடைநிறுத்தம் இப்பொழுது.

தூரத்து விடியலைத்தேடி
அலைந்து பறந்த புற்றீசல்கள்,
சருகென்ற வாழ்வுணர்ந்து
இருள்சூழ்ந்து அமர்ந்திருக்க

வெளியிலோர் குருவிக்கூட்டம்.
உற்சாக சப்தம் குறையவில்லை
குஞ்சுகளின் கொஞ்சல்களில்
நெஞ்சம் நிறைகிறதே.

வசந்தம் தவறா வண்ணப்பூக்களும்
வாடிக்கையாய் தலையசைக்கும்
வாசனை ரோஜாவும் சொல்லியதே,
“இப்பொழுதில்” வாழும் மந்திரம்.

மதியாழி

வாழ்க்கை



இழப்பது எதுவென்று தெரியாமல்
காலம் கழிந்தபின்
இழந்தது எதுவென்று தெரிந்து
வருந்திப் பயனில்லை

மறதியிடம் இழப்பை இழந்துவிட்டு
அனுபவத்தை படிக்கட்டாய் அமைத்தால்
வாழ்க்கை என்றும் சுகமே!!

இறப்பிடம் வாழ்க்கையை இழக்கும் முன்
வாழ்க்கையை இழக்காமல்
வாழ்ந்துதான் பார்ப்போமே!!

ம. மாணிக்கவாசகன்

வாசகர் கடிதங்கள்

முழவதும் படித்தேன். பூக்காரம்மா கவிதை அருமை. பிள்ளைகள் காட்சிப்பேழை அழகு. வாழ்த்துகள். -சுமித்ரா, புதுவை

"கெடுவாய்ப்பாக" - புதிதாய் அறிந்துகொண்ட சொல், நன்றி. திருக்குறள் பகுதியில் ஆங்கில அர்த்தமும் சேர்த்தால் சிறுவர்களும் பயன்பெறுவர் – ஹரி, இங்கிலாந்து

மின்னிதழ் மேலும் சிறப்பாய் அமைய வாழ்த்துகள் - ஜெய், கலிபோர்னியா

மின்னிதழ் ஆக்கம் அருமை. எங்கள் பிள்ளைகள் படிக்க இதில் நிறைய தகவல்கள் உள்ளன. அவர்களிடம் நிச்சயம் பகிர்வோம். சிறப்பாக இந்தப் பணி தொடருங்கள். -தியாகு, தில்லை

பறவை - பூநாரை (Flamingo)

தென்கச்சி கதைகள்



ஒருத்தர் வந்தார்.

"சார்! ஒரு குருகிட்டே சீடனாச் சேரணும்னு ஆசைப்படறேன். எங்கேயாவது ஒரு நல்ல குருநாதர் கிடைச்சாச் சொல்லுங்களேன்!"ன்னார்.

இவரு சொல்றதைப் பார்த்தா... குருநாதர்ங்கறவர் ஏதோ கடைகள்லே விலைக்கு வாங்கக் கூடியவர்ங்கறது மாதிரியில்லே இருக்கு! அதுக்கு நான் ஒரு 'இடைத்தரகர்' மாதிரி நினைச்சுகிட்டு என்கிட்டே வந்து கேக்கறார், 'நல்ல குருநாதர் கிடைச்சா சொல்லு!'ன்னு!

நான் என்ன பண்ணினேன் தெரியுமா? உடனே அவரை என் எதிர்லே சீடர் மாதிரி உக்கார வச்சு கொஞ்ச நேரத்துக்கு நான் அவருக்குக் 'குரு' வா மாறினேன், நாமெல்லாம் இதுமாதிரி சந்தர்ப்பத்திலே குருவா மாறினாத்தான் உண்டு.

ஒரு குருகிட்டே சீடனாச் சேர்றது எப்படி? என்பதற்கு சுவாமி சிவானந்தர் வாழ்க்கையிலே நடந்த சில நிகழ்ச்சிகளை அவர்கிட்ட எடுத்துச் சொன்னேன். அப்பவாவது அதைப் புரிஞ்சிக்குவார்-ங்கற நம்பிக்கையிலே!

இமயமலை அடிவாரத்துலே ரிஷிகேசம் இருக்கு. சுவாமி சிவானந்தர் அங்கேதான் இருந்தார். சிவானந்த ஆசிரமத்தை அவர்தான் உருவாக்கினார்.

அவர்கிட்டே சீடரா ஆகணும்ங்கற ஆசையிலே பல ஊர்கள்லேயிருந்து பலபேர் தேடிகிட்டு வர்றது உண்டு.

ஒரு தடவை, ரொம்பப் படிச்ச ஒருத்தர் அவருகிட்டே வந்தார். "சுவாமி! நான் ரொம்பப் படிச்சுருக்கேன், உங்ககிட்டே வரணும்னு ஆசைப்பட்டு வந்திருக்கேன்." -ன்னார். "என்ன படிச்சிருக்கீங்க?"ன்னு கேட்டார் சுவாமிஜி. அவர் ரொம்ப கர்வத்தோட "எம்.ஏ!"ன்னார்.

"ஓ! அப்படியா... அப்படின்னா மாஸ்டர் ஆப் அவித்யா" ன்னாராம் சுவாமி சர்வ சாதரணமா.

மாஸ்டர் ஆப் அவித்யா - ன்னா அறியாமையில் சிறந்தவன்னு பொருள். அதைச் சுருக்கினா எம்.ஏன்னு தானே வரும்! அதைக் கேட்டதும் வந்தவருடைய 'கர்வம்' பறந்து போயிட்டுதாம்.

இன்னொரு நாள், ஒரு பெரிய பணக்காரர் வந்தார். சுவாமி மகாராஜ்கிட்டே சீடனாகணும்! ன்னார். சுவாமி நிமிர்ந்து பார்த்தார். வந்திருந்தவர் ரொம்பக் கட்டான உடை அணிஞ்சிருந்தார். தான் ஒரு பெரிய பணக்காரர்-ங்கற கர்வம் அவர்கிட்டே இருந்தது. சுவாமி அங்கே இருந்தவங்களைக் கூப்பிட்டு... "சரி அப்படின்னா அந்த டின்னை இவர்கிட்டே குடுங்க!"ன்னார்.

ஒரு காலி டப்பாவைக் கொண்டாந்து அவர் கிட்டே கொடுத்தாங்க. அவர் அதை வாங்கிக்கிட்டு முழிச்சார். "என்ன பாக்கறீங்க? இந்த டப்பாவை எடுத்துக்கிட்டு நாலு இடத்துக்குப் போங்க. பிச்சை எடுத்து மாவு கொண்டுக்கிட்டு வாங்க. அப்புறம் சப்பாத்தி தயார் பண்ணி எனக்கும் குடுத்து நீங்களும் சாப்பிடலாம்!" என்றார்.


வந்த பணக்காரர் அங்கேயே நின்னுக்கிட்டிருந்தார்.

ஆன்ம சாதனைன்னா அது சாதாரண விஷயமில்லை; வேடிக்கையான சமாச்சாரமுமில்லை. அகங்காரம் இல்லாமே பிச்சை வாங்கி குருவுக்கும் கொடுத்துத் தானும் சாப்பிடணும்!" அப்படீன்னார் சுவாமி. அது ரொம்பக் கஷ்டமான காரியமாச்சேன்னு நினைச்சார் அந்தப் பணக்காரர். மெதுவாச் சொல்லிக்காமே கொள்ளாமே நழுவிப் போயிட்டாராம்.

இன்னொரு நாள் ஒருத்தர் வந்தார். வேகமா வந்தார். சுவாமியை வணங்கினார். "சுவாமி! இன்னியிலேயிருந்து நீங்கதான் எனக்குக் குரு!"ன்னார். "அப்படி ஒரு வேலை எனக்குப் போட்டுக்கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி!" அப்படின்னு இங்கிலீஷ்லே பளிச்சுன்னு சொன்னாராம் சுவாமி. பின்னே என்ன! இவராப் போயி நின்னுகிட்டு, "நீதான் எனக்கு குரு!"ன்னா அது ஏதோ அப்பாயின்ட்மென்ட் போட்டுக் கொடுக்கறது மாதிரிதானே இருக்கு.

சரி... இந்த நிகழ்ச்சிகள் லேயிருந்து நாம தெரிஞ்சிக்க வேண்டிய விஷயம் என்ன தெரியுமா? ஒரு குருவைச் சீடன் தேர்ந்தெடுக்க முடியாது! ஒரு குருவேதான் தன்னுடைய மாணாக்கனைத் தேர்ந்தெடுக்கணும். அப்படிப்பட்ட பழக்கமெல்லாம் இல்லாததுனாலேதான் இன்றைக்கு ஏகப்பட்ட அவஸ்தைகள்.

ஒரு பையன் வாத்தியாரைப் பார்த்துச் சொல்றான்: "சார், என்னையெல்லாம் நீங்க இப்படித் திட்டப்படாது சார். ஏன்னா, நான் **10,000** ரூவா செலவு பண்ணி இங்கே 'சீட்' வாங்கியிருக்கேன்!" அப்படீங்கறான்.
அதுக்கு வாத்தியார்: "இருந்தாலும் நான் உன்னைத் திட்டாலாம்டா... ஏன்னா **2,00,000** ரூவா செலவு பண்ணி நான் இந்த வேலையை வாங்கியிருக்கேன்!" அப்படிங்கறாரு!



பறவை - மஞ்சள்கண் பட்டாணிக் குருவி (Black-lored Yellow Tit)

MKMM ஊரடங்கில் உற்சாகம்


- அரவிந்த் கணேசன்

கொரோனா தொற்று பேரிடராக மாறி உலகை உலுக்கியது. வாழ்க்கையை முடக்கியது. ஒரே நாளில் ஊரடங்கு என்ற பெயரில் நமது சமூக வாழ்வு தலைகீழாக புரட்டிப் போடப்பட்டது. இந்நிலையில் MKMM தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு புத்துணர்ச்சியைப் புகட்ட புது யுக்திகளைக் கையாள தொடங்கியது. தொழில்நுட்பத்தின் துணையோடு மக்களை ஒன்றிணைத்தது. நாங்கள் "சவாலே சமாளி" என்றோம். நீங்கள் சளைத்தவர்கள் அல்லவே. அந்த சவால்களை வெற்றி விழாக்களாக மாற்றினீர்கள்.

ஆண்களுக்குச் சமையல் சவால்களைக் கொடுத்தோம். அவர்கள் நளபாகம் நமக்கு லாவகம் என்று சுலபமாகச் சமைத்து அசத்தி விட்டார்கள்.

சரி, வயிற்றுக்குத் தீனி கொடுத்த பிறகு சற்று மூளைக்கும் தீனி கொடுக்கலாம் என்று ஒரு "கேள்வி பதில்" போட்டி நடத்தினோம். அதிலும் நாங்கள்தான் வல்லவர்கள் என்று நீங்கள் நிரூபித்து விட்டீர்கள்.

தாய் எட்டு அடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் அல்லவா? குழந்தைகளுக்கு ஓவியம் மற்றும் கலை சார்ந்த சவால்கள் அளித்தோம். அவர்கள் தங்களின் கற்பனைத்திறனால் நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டார்கள்.





சமூகச் சங்கடத்திலும் ஒரு சங்கீத சந்தோஷத்தைக் கொடுக்க இசை மாலையை அமைத்தோம். அதில் குடும்பத்தோடு பங்கேற்று நீங்கள் எல்லோரையும் வெற்றி பெற வைத்தீர்கள். நமக்குள் ஒளிந்திருந்த பல எஸ்.பி.பி களையும் ஜானகிகளையும் கண்டெடுத்தீர்கள்.

அழகுக்கு அழகு சேர்த்திட அவசரப்படாத சவால் (Don't Rush Challenge) ஒன்றை MKMM பெண்களுக்கு அளித்தோம். அதில் நீங்கள் அழகியல் இலக்கணத்தில் ஒரு புதிய அத்தியாயம் எழுதி, MKMM சரித்திரத்தில் ஒரு அழகிய இடத்தைப் பிடித்துவிட்டீர்கள்.

ஊரடங்கிலும் சமூகஉணர்வு உயிர் பெற்றுவிட்டது. மகிழ்ச்சி மேலோங்கிவிட்டது. சமூக விலகலின்போதும் நாம் இணையதளத்தின்மூலம் ஒருங்கிணைந்தோம், ஒற்றுமை கொண்டோம். சவால்களை சந்தித்தோம், சந்தோஷத்தைப் பெற்றோம். உங்களின் சந்தோஷமே எங்களின் ஊக்கம்.


இன்னும் பல நிகழ்ச்சிகளோடு மற்றும் பல சவால்களோடு இந்தப் பேரிடரையும் ஒரு பெருவிழாவாக மாற்ற அயராது முயற்சிப்போம். உங்களின் ஆதரவோடு நிச்சயம் வெற்றி பெறுவோம்.


என்றும் அன்புடன்
மில்டன் கீய்ன்ஸ் முத்தமிழ் மன்ற நண்பர்கள்.


காட்சிப் பேழை


பள்ளி மாணவர்களின் திட்டப்பணிகள்
உங்கள் பார்வைக்கு...

இந்த இதழில்: நிலை 7 மாணவர்கள்









நேர்மறை

பதிப்பாசிரியர் என்னவோ நேர்மறை எண்ணங்களைப் பற்றி ஒரு கட்டுரை கேட்டார். ஆனால், நமக்கு அறிவுரை சொல்ல வராது. மேலும், அறிவுரையைப் பொறுத்த வரை, சொல்பவருக்கு இருக்கும் உவப்பு கேட்பவர்களுக்கு எப்போதும் இருப்பதில்லை. எனவே, இதோ ஒரு கதை (இல்லை வரலாறா? அல்லது எழுத்தாளனின் நாட்குறிப்பா?)

கதிரேசனுக்கு வழக்கம் போல அதிகாலையில் விழிப்புத்தட்டி விட்டது. ஊரடங்கு ஆரம்பித்து அறுபது நாட்கள் ஆகிவிட்டன. ஆனால் அவனுக்கு ஏனோ ஆறாம் நாள் போலத்தான் தோன்றியது.

காரணம்? அவன் முகப்புத்தகத்தைத் (facebook) திறந்து பல நாட்களாகின்றன, புலனத்தில் (whatsapp) அதிகம் பகிர்வதும் இல்லை. செய்தித்தாள் தினசரி 10 நிமிடம் பார்ப்பதோடு சரி. எல்லா சமூக வலைத்தளங்களும் பெரும்பாலும் எதிர்மறை எண்ணங்களையே விதைக்கின்றன. அவை காண்பிக்கும் உலகத்தைவிட நிஜ உலகம் மிகவும் அழகானதென்று அவனுக்குத் தெரியும்.

அவன் எழுந்தவுடன் சூரிய உதயத்தைப் பார்ப்பது வழக்கம். வீட்டுக்கு முன்புறம் உள்ள மரத்தின் பறவைகள் சத்தமிட்டுக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கும் சிட்டுக்குருவிகள், புறாக்கள், நீண்ட வால் கொண்ட கருங்குருவிகள். அதிலும் ஒரு சிட்டுக்குருவி கிட்டத்தட்ட ஒரு நண்பனாகவே ஆகி விட்டது. அது பெரும்பாலும் தன் அலகில் ஒரு புல்லையோ குச்சியையோ ஏந்தியபடி ஜன்னல் கண்ணாடிக்கு பின் நிற்பது வழக்கம். அவன் ஜன்னல் அருகில் சென்றால் கூடப் பயந்து பறப்பதில்லை.

சூரிய சந்திப்புக்குப் பின்னர் சிறிதுநேரம் சமையல் அறையைச் சுத்தப்படுத்தும் வேலை நடக்கும். பல வருடங்களாக அவனுடைய மனைவி சொல்வதுண்டு. கண் விழித்ததும் சுத்தமான சமையல் அறையில் நுழைந்தால் மிகவும் சந்தோசமாக இருக்கும் என்று. பல வேலைகளுக்கு நடுவில் மனைவிக்கு பெரும்பாலும் இரவில் சுத்தப்படுத்த வாய்த்ததில்லை. அவனுக்கு இந்த அரைமணி நேர வேலையால், நாள் முழுவதும் மன மகிழ்ச்சியோடு இருக்கும் மனைவி கிடைக்கிறாள் (திருமணமானவர்களுக்குத் தெரியும் அது எவ்வளவு பெரிய பொக்கிஷம் என்று).

அவனுக்கு இன்னும் ஒரு கூடுதல் சந்தோஷமும் உண்டு. எப்போதும் தனிமையில் வாய்விட்டுப் பாடுவது அவனுக்குப் பிடிக்கும். ஆனால் வீட்டிலுள்ள எவருக்கும் அது பிடிப்பதில்லை.

(அவன் பாடுவதைக் கேட்டால் கிட்டத்தட்ட நந்திக்கலம்பகத்தில் வரும் தலைவியிடம் தூது வரும் பாணனைப் போலத்தான் நடத்துவார்கள்.

காட்டிலழும்பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்.

பொருள்: யாரோ பாடுற சத்தம் கேட்டது. பேய்தான் அழுகுதுன்னு அம்மா சொன்னாங்க. மத்தவங்க நரியா இருக்கும்னு சொன்னாங்க. என் தோழி நாய்தான்னு சொன்னாள். நான் சொன்னேன் அது நீயாத்தான் இருக்கும்னு)

எனவே, இப்போதெல்லாம் காலையில் தனிமையில் அவனுக்காக அவனே நடத்தும் ஒரு பாட்டுக் கச்சேரி உண்டு. அவனுக்கு நாள் முழுவதும் அது தரும் உற்சாகம் அளவிட முடியாதது.

குழந்தைகளுடன் மதிய நடை முன்பு எப்போதும் வாய்த்ததில்லை. ஆனால் இப்போது தினசரி செல்ல முடிகிறது. அதுவும் இந்த இளவேனில் காலத்தில் ஊரே அப்போதுதான் அலம்பி விட்டது போல பளிச்சென்று இருக்கிறது. பச்சைக் கம்பளம் போன்ற புதிய புல்வெளி. முத்தும் ரத்தினமும் பதித்தது போல மஞ்சளும், சிவப்பும், வெள்ளையுமாய் எண்ணிலடங்கா மலர்க்கூட்டம். சின்னவள் எப்போதும் வண்ணத்துப்பூச்சிகளை எண்ணுவது வழக்கம். ஒரு நாளும் அந்த எண்ணிக்கை பத்துக்குக் குறைந்ததில்லை.

சில்லென்ற இளம் காற்று, உற்சாகமான உரையாடல். அதிலும் சிறுவர்களுக்கு, அவர்களின் உலகத்தில் நுழைந்து அவர்கள் சுவராஸ்யமாக நினைக்கும் எதைப்பற்றியாவது பேச ஆரம்பித்தால், உற்சாகம் கரைபுரண்டு ஓடும். கதிரேசனுக்கு முன் எப்போதும் நேரமும் பொறுமையும் இருந்ததில்லை. இப்போது நேரம் இருக்கிறது. அதனால் பொறுமையும் வந்துவிட்டது. சின்னவளுக்குப் பிடித்த உரையாடல் எப்போதும் ஆழ்கடல் உயிரினங்கள், அதுவும் குறிப்பாக திமிங்கலங்கள், சுறாக்கள் போன்றவை. இந்த நடைப்பயணத்தில் இதைப் பற்றி பேசுவதால் ஆழ்கடலில் பயணம் போன ஒரு உணர்வு வரும்.

இதற்கு நேர்மாறாக பெரிய பையனை நடத்த வேண்டும். அவனுடைய உலகத்தில் நாம் அவன் அனுமதித்தாலொழிய நுழையக்கூடாது. எப்போதும் பேசாமல் நடப்பான்.. திடீரென்று உற்சாகம் பெருக பள்ளியில் நடந்தவை, எங்கோ கேட்டவை, பார்த்த திரைப்படம் என்று அனைத்தையும் சொல்வான். சில வருடங்களுக்கு முன் அவன் கையை இறுகப் பற்றிக்கொண்டு சாலையைக் கடந்த சிறுவன், இன்று நன்கு வளர்ந்து அவனுக்கென ஒரு தனி உலகம் கொண்டு வாழ்வதைப் பிரமிப்புடன் பார்ப்பான்.

இவ்வளவு நேர்மறையாக இருந்தாலும் எங்காவது எதிர்மறை எண்ணங்கள் வந்து விழுவதுண்டு. எப்போதாவது நண்பர்கள் அல்லது உடன் வேலைசெய்பவர்கள் வெளியே செல்லாமல் வாழ்க்கை மிகவும் கடுமையாக இருக்கிறது என்று சொல்வது உண்டு. அப்போதெல்லாம் ஔவையின் இந்தப் பாடலை நினைத்துக்கொள்வதுண்டு.

அரிதரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது

இரவு படுக்கப்போகும் முன் அவனுக்குப் பிடித்த எழுத்தாளரின் சிறுகதை ஒன்று வாசிப்பது வழக்கம் (அந்த எழுத்தாளரும் இந்த ஊரடங்கில் தினமும் ஒரு சிறுகதை எழுதுகிறார்). அது எப்படியிருக்கும் என்றால், பசியும் அசதியும் கொண்ட கைகுழந்தையைப் பார்த்திருக்கலாம், ஒருவித அலுப்பும் சலிப்பும் தெரியும். ஆனால் பால்புட்டி வாயில் வைத்ததும் ஒரு உற்சாகம் பிறக்கும். சிறிது சிறிதாய் குடிக்க குடிக்க முகத்தில் ஒரு குறுநகை வரும். கன்னத்தில் குழி விழும். அதன் கண்களில் சிரிப்பைக் காணலாம். புட்டி காலியாகும்போது பார்த்தால் குழந்தையின் கண்கள் சொருகியிருக்கும். கடைசித்துளி பால் செல்லும்போது ஒரு ஆழ்துயில் கண்களைத் தழுவி இருக்கும். கதிரேசனுக்கு சிறுகதைதான் அந்த பால்புட்டி.

இதோ, இன்றும் அந்தச் சிட்டுக்குருவி தன் அலகில் ஒரு தழையை ஏந்தியபடி காத்துக்கொண்டிருக்கிறது. ஜன்னலுக்குப்பின் கதிரவன் எழுந்து கொண்டிருக்கிறான். மனமெங்கும் உற்சாகம். இன்று மட்டுமென்ன, இன்னும் ஐம்பது நாள்களைக் கூட நேர்மறையான எண்ணங்களுடன் ஊரடங்கை இனிமையாகக் கடக்க முடியும்.

- எரிதழல்

பறவை - பழச்சொண்டான் கிளி (Toucan Parrot)

சொல்...

இனிய தமிழ்ப் பள்ளி உறவுகளுக்கு வணக்கம்.

சென்ற இதழில் வெளியான "தொல்காப்பியரின் சொல்" பகுதியில் சொல்லின் பல வடிவங்கள் பார்த்து சொல்லின்பால் என் எண்ணம் பயணிக்கலானது. ஆதி மனிதன் நமக்களித்த கொடை சொல். சொல்லினைப்போல் பல உருவமும் பயனும் அளிக்கும் ஒரு விஷயம் இனி இருக்கமுடியாது.



கனிவோடு சொல்லப்படும் வார்த்தைகள் மருந்தாகவும்,
காழ்ப்போடு சொல்லப்படும் வார்த்தைகள் ஆயுதமாகவும்,
அன்போடு சொல்லப்படும் வார்த்தைகள் உணர்வுகளாகவும்,
ஏளனத்தில் சொல்பவை வீழ்ச்சிக்காகவும்
பல உரூபங்கள் எடுப்பவைச் சொற்கள்.

சொன்ன சொல் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதால்தான் கோவலன் கொல்லப்பட்டான். மதுரையும் எரிந்தது. ஆட்சிசெய்த மன்னனும் மாண்டான். "I have a dream" என மார்ட்டின் லூதர் கிங் முழங்கிய அந்த ஒரு வாசகம் வரலாறு காணாத பெரும் இனப்புரட்சிக்கு வித்திட்டது. ஒரு தலைவனின் சொல்லை ஒட்டுமொத்த சமுதாயமும் பின்பற்றும். அத்தகைய பொறுப்பிலுள்ள தலைவனின் நோக்கம் மேன்மையானதாகவும், சிந்தனை தெளிவானதாகவும், அவனுடைய பொறுப்புணர்வு பன்மடங்கானதாகவும் இருத்தல் வேண்டும்.

சொல்லும் சொல் உண்மை என்று அறிந்து, அதை சொல்வதனால் ஏதேனும் பயனிருந்தால் மட்டும் பேசும்படி சொல்கிறார் கிரேக்க அறிஞர் சாக்ரடீஸ். நாம் அனைவரும் இப்படிச் சிந்தித்துப் பேசினால் நாம் பேசும் சொல்லின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விடும் என்றே நினைக்கிறேன்.

வாக்கினிலே இனிமை வேண்டுகிறான் பாரதி. எத்தனைத் திண்ணம் படைத்த கவி? அவனே இனிமையை வேண்டுகிறான் என்றால் அதனுள் எத்தனை ஆழ்ந்த பொருளிருக்க வேண்டும்?

ஒளவியம் பேசல் என்கிறாள் ஒளவை. நான்கு அறங்களில் வன்சொல் சொல்லாமல் இருப்பது ஒரு அறம் என்றும், நாவினால் சுட்ட வடு ஆறுவதில்லை என்றும் அறிவுறுத்துகிறான் வள்ளுவன்.

"ஒரு சொல் சொல்லப்படும்போது ஒன்றாகவும், கேட்கப்படும்போது பத்தாகவும், தாக்கப்படும்போது ஆயிரமாகவும் மாறுகிறது" என்கிறது நவீன இலக்கிய எழுத்தாளர் ஜெயமோகனின் எழுத்து.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவன் நாவிலிருந்து உதிரும் சொல்லுக்குப் பொறுப்புணர்வு இருத்தல் அவசியம்.

பெற்றோர்கள் நாம், நம் பிள்ளைகளிடம் நம்பிக்கை, நல்லொழுக்கம், அறம்காத்தல் ஆகிய விதைகள் விதைப்போமாயின் அவை நற்பயனளிக்கும். ஆலவிருட்சமாய் வளரும்.

முன்னோர் நமக்களித்த நன்கொடையாம் சொல்லை நாம் நல்விதையாய், அருமருந்தாய், ஆறுதலாய், ஊக்கமாய், உள்ளார்ந்த உண்மையாய் அநீதிக்கெதிரான வேள்வியாய் பயன்படுத்துவோம். நன்றி

- **கண்மணி**

பறவை - பூநாரை (Flamingo)

என்னைப் பற்றி நான்...



பெயர்:

மணிவண்ணன் கா.சா

தமிழ்ப்பள்ளியில் நான்:

பெற்றோர்(ன்), நிலை 3 ஆசிரியர்.

பொழுதுப்போக்கு:

வினாடி வினா நிகழ்ச்சி,
மட்டைப்பந்து (இந்திய அணி).

முதல் மகிழுந்து:

மாருதி வேகன் ஆர் (இந்தியா)

எனது கனவு விடுமுறை:

COVID-19யிலிருந்து விடுபட்டு மறுபடி அலுவலகம் செல்லுவதே இப்போதைய கனவு விடுமுறையாக இருக்கு. 😊

பிடித்த இசை:

இளையராஜா (முன்பு)
ஷான் ரோல்டன் (தற்போது)
-'ஜோக்கர்' தமிழ்ப் பட புகழ்

இது இல்லாமல் என் வாழ்க்கை இல்லை...ஏன்:

நல்ல உணவும் தூக்கமும்.

பிடித்த வார நாள்:

ஞாயிறு
.. தமிழ்ப்பள்ளி நாளன்றோ 😊

விரும்பிப்படிக்கும் எழுத்தாளர்:

கற்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் (முன்பு)
இப்பொழுது குறிப்பிட்டு சொல்லும்படி யாரும் இல்லை.

நான் சந்திக்க விரும்பும் நபர்:

மறைந்த இந்திய விஞ்ஞானி மற்றும் மக்கள் போற்றிய மகத்தான மனிதர் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள்.

என்னைப்பற்றி யாரும் அறியாத ஒன்று:

நான் ஆசிரிய குடும்பத்தில் பிறந்தேன் (அப்பா, அம்மா, அக்கா, அண்ணன், அத்தை, அண்ணி அனைவரும் ஆசிரியர்களே. இப்பொழுது மனைவியும்)

பறவை - மஞ்சள் இருவாயன் (Yellow Hornbill)

ஜூன் மாதம் பிறந்த நாள்
கொண்டாடிய நம் பள்ளிப் பிள்ளைகள்



அடிப்படை நிலை:1

கீர்த்தனா ஜெயபால்
சாதனா ஜெயபால்

நிலை:1

சத்க்ருத் மகேஷ்

பிள்ளைச்செல்வங்கள் அனைவருக்கும்
பிறந்தநாள் வாழ்த்துகள் !!

நிலை:3

ராகவ் கணேஷ்
சஞ்சீவ் பிரசன் சுனில்
ஹர்ஷினி ஆனந்த்
ரிஷி கார்த்திக் ரமேஷ்குமார்

நிலை:4

ரயன் அருண்

தமிழர் விளையாட்டுகள்

*இப்பகுதியில், தமிழர்களின் பண்டைய விளையாட்டுகள் பற்றிய செய்திகளைத் திரட்டி நம்மோடு பகிர்கின்றனர் **நிலை:2B** வகுப்பு மாணவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்: **மீனா***

2. பல்லாங்குழி



பல்லாங்குழி விளையாட்டு ஆப்பிரிக்கா மற்றும் இந்திய நாடுகளில் பண்டைய காலந்தொட்டு இன்று வரையிலும் விளையாடப்பட்டு வருகிறது. இது எகிப்து பிரமிடுகளில் செதுக்கப்பட்டுள்ளதும்கூட. தமிழகத்தில் 'அடியாருக்கு நல்லார் உரையில்' இதைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஆரம்பத்தில் கிராமங்களில் மண்ணில் குழி தோண்டி விளையாடினார்கள். நாளடைவில் மண் பலகையில் குழிகளை அமைத்து விளையாடுகிறார்கள்.

விதிகள்

பல்லாங்குழியில் பதினான்கு குழிகளில் கற்கள், புளியமுத்து மேலும் சோழிமுத்துகளை குறிப்பிட்ட எண்ணிக்கையில் வைத்து வலமிருந்து இடதுபுறமாக அனைத்து குழிகளிலும் போட்டுக்கொண்டு வரவேண்டும். காய்கள் தீர்ந்த பின்பு அடுத்த குழியிலிருந்து எடுத்துப் போடவேண்டும். இவ்வாறு போட்டுக்கொண்டு வரும்போது ஏதேனும் குழியில் காய்கள் இல்லாமல் இருந்தால் அடுத்தக் குழியில் இருக்கும் காய்களை எடுத்துக்கொள்ளலாம். இது முடிந்தவுடன் அதேபோல எதிரே இருப்பவர் விளையாட ஆரம்பிக்கவேண்டும். இவ்விளையாட்டில் முடிவு தெரிய அதிக நேரமானால் காய்கள் அதிகம் வைத்திருப்பவர் வெற்றியாளர் ஆவார்.





நன்மைகள்

பல்லாங்குழி விளையாடுவதால் மனக்கணக்கு, எண்ணிக்கைத்திறன் அதிகரிக்கிறது. காய்களை எடுத்து விளையாடும்போது விரல்களுக்கு பயிற்சி கிடைப்பதால் அவற்றின் பலம் அதிகரிக்கிறது. மேலும் நுண்ணிய கணிதத்திறன், அறிவுத்திறன், வாய்ப்புநிலை இயல்பு இந்த விளையாட்டில் காணப்படுவதால் அவையும் வலுபெறுகின்றன.



பறவை - மீன்கொத்தி (KingFisher)

மூளைக்கு வேலை

கீழே உள்ளவற்றில் பன்னிரெண்டு தமிழ் மாதங்கள் கண்டுபிடியுங்களேன் பார்ப்போம். மாதத்தின் பெயர்கள் வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், குறுக்காக என எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். சித்திரையை நாங்கள் தொடக்கிவிட்டோம் மற்றவை உங்கள் கையில்.....

உ	அ	த்	ம	ற்	ப	ப	இ	க	ற்	ப்	ற்	க
த	எ	க்	ச	உ	ச	ங்	க	க	க	எ	க்	ப்
எ	க்	ற	உ	த	ற	கு	கா	ர்	த்	தி	கை	ட்
ற	வை	கா	சி	ட்	அ	னி	த	த்	த	க	அ	உ
ப	ப்	ப	எ	க	ட்	ற	க	உ	ற	இ	ற்	ற
ப	இ	க	ச்	ப்	உ	ஔ	ப்	ற்	த்	ச	த்	ப
ச்	ட்	சி	ப்	ப்	ஐ	ற்	அ	மா	ற	ண	ட	ச்
அ	மா	ட	எ	ட	ப்	உ	ட	பூ	ர்	ப	ட	ஆ
பு	க	ச	த்	க	ப	ப	க	எ	ச	க	இ	னி
ர	அ	ட்	ற்	ற்	சி	ற	ழ	ச்	ற்	உ	ழி	எ
ட்	ற	அ	அ	ப	எ	இ	ட	ப	ட	த	ச்	ட்
டா	தை	ப	அ	க	ட்	ச்	ட்	க்	ப்	ப	அ	இ
சி	ட	ஆ	அ	ச்	சி	த்	தி	ரை	ச	ட்	த்	உ
ஐ	ற்	ப்	டி	ச்	ட்	ச	ற்	உ	எ	எ	ற்	ச்
த	ச்	ற	ற்	ச	ச்	டா	த	ச்	ஆ	வ	ணி	ற்

கீழே உள்ள சொற்குவியல்களிலிருந்து சரியானவற்றைத் தெரிவு செய்து ஐந்து திருக்குறள்கள் அமையுங்கள். எங்கள் பள்ளியின் நிலை:3 மாணவர்கள் திறமைக்கு இது சவாலாக இருந்திருக்கவில்லை.. உங்களுக்கு எப்படி?

நன்றி	தன்மகனைச்	கற்பவை	செய்து
கற்க	செய்தாரை	இன்னா	கசடறக்
நன்று	சான்றோன்	ஈன்ற	ஆங்கே
நிற்க	நன்றல்லது	கைபோல	மறப்பது
தாய்	மறப்பது	எனக்கேட்ட	அன்றே
தக	அவர்நாண	அதற்குத்	இடுக்கண்
நட்பு	பொழுதின்	நன்னயம்	கற்றபின்
விடல்	பெரிதுவக்கும்	உடுக்கை	இழந்தவன்
	களைவதாம்	ஒறுத்தல்	நன்றன்று


இவ்விதழை அலங்கரித்த பறவைகள்..



மயில்
(Peacock)



இமிரிச்சிட்டு
(HummingBird)



செனகல் குதிரைத் தலைக் கோட்டான்
(Senegal Whimbrel)




பூநாரை
(Flamingo)




மஞ்சள்கண் பட்டாணிக் குருவி
(Black-lored Yellow Tit)



பனிப்பாடி
(Penguin)



பழச்சொண்டான் கிளி
(Toucan Parrot)



பூநாரை
(Flamingo)



மஞ்சள் இருவாயன்
(Yellow Hornbill)



மீன்கொத்தி
(KingFisher)

நிறைவாக.....

இந்த மின்னிதழ் உங்களுக்கு ஒரு இனிய அனுபவத்தைத் தந்திட நாங்கள் முழுமையாய் முயற்சித்துள்ளோம். அதன் விளைவாய் உங்களுக்கு ஒரு புதிய சுகானுபவம் கிட்டியிருக்கும் என நம்புகிறோம்.

கெடுவாய்ப்பாக, எதேனும் உங்கள் மனதை பாதித்திருந்தாலோ, மனம் புண்படும்படி அமைந்திருந்தாலோ வருந்துகிறோம். உங்களது புகார்களை/ மேலதிக கருத்துகளைக் கீழ்க்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். அதுபோல், உங்கள் பாராட்டுகளையும் எங்களிடம் பகிர்ந்து எங்களுக்கு உற்சாகமூட்டலாமே.

நீங்கள் விரும்பும், தமிழ் உலகிற்குப் பயனளிக்கும் வேறு பல விடயங்கள் இந்த மின்னிதழில் சேர்த்திட எங்களைத் தொடர்புகொள்ளுங்கள். செவி சாய்ப்போம். நன்றி.

வேண்டுகோள்:

இந்த மின்னிதழ் நம் மொழி சார்ந்தும் நம் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள் ஆகியோரது படைப்புகளைத் தாங்கியும் வலம் வரும்.

உங்களது படைப்புகள் இதில் இடம் பெற ஆசிரியர் பக்கம் பகுதியிலுள்ள எங்கள் குழுவில் ஒருவரையோ அல்லது கீழே உள்ள மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளுங்கள்.

மின்னிதழ் குழு தொடர்புகொள்ள:

emagazine@mktamil.org

http://www.mktamil.org/

https://www.facebook.com/groups/MKTamilSchool

